# ஆரம்ப அறிக்கை

## இலங்கை சனாதிபதித் தேர்தல் 2005

**ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புப் பணியின் பிரதம கண்காணிப்பாளர் ஜோன் குஷ்னஹான் அவர்களால் 2005 நவம்பர் 19இல் கொழும்பில் சமர்ப்பிக்கப்பட்டது.**

## EU EOM ஆரம்ப அறிக்கையின் சாராம்சம்

- தெற்கிலே தேர்தல் தினம் திருப்திகரமாகக் கழிந்தது. அது 2004இனை விட முன்னேற்றகரமானதாக அமைந்திருந்தது. எனினும் வடக்கிலும் கிழக்கிலும் வன்முறையினாலும் எல்ரிரிஈ அமுல்படுத்திய பகிஷ்கரிப்பினாலும் வாக்களிப்பு பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக, பல பிரதேசங்களிலும் வாக்காளர்கள் மிகக் குறைவாகவே வாக்களிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

- தேர்தலுக்கான சட்ட ஏற்பாடுகள் சனநாயகத் தேர்தலினை நடத்துவதற்குப் போதிய அடிப்படையினை வழங்குவதுடன், செயன்முறையிலே வெளிப்படைத் தன்மையினையும் அனுமதிக்கின்றது. எனினும் நவம்பர் 10ஆம் தேதிய உயர் நீதிமன்ற இடைக்கால உத்தரவானது, எல்ரிரிஈ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வாக்காளர்களுக்கு எதிரான ஒரு பாகுபாட்டினையே ஏற்படுத்தியுள்ளது.

- EU EOM, தேர்தல் பிரசாரத்திற்காக அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை அவதானித்துள்ளது.

- முழுவதுமாக எடுத்து நோக்கும்போது, ஊடகங்கள் தேர்தலில் வாக்களிக்கவுள்ள மக்களுக்கு பல்வகைமை மிக்க அரசியல் கருத்துக்களின் வீச்சினை வழங்கியிருந்தன. இதன் காரணமாக மக்கள் கட்சிகளையும் வேட்பாளர்களையும் ஒப்பிட்டு தேர்தல் தினத்திலே நன்கு அறிந்து செய்யப்படும் தெரிவினை மேற்கொள்ள இயலுமாகியது.

- தேர்தல் தொடர்பான செய்திகளை உள்ளடக்குவதிலே சமநிலையானதும் பக்கச் சார்பற்றதுமான அறிக்கையிடலை வழங்கும் தமது கடமையினை அரச ஊடகங்கள் நிறைவேற்றவில்லை.

- தேருநர் இடாப்புக்களை மிகச் சரியாக இற்றைப்படுத்துவது தொடர்ந்தும் பிரச்சினைக்குரியதாகவே இருக்கின்றது.

- பொதுவாக, தேர்தல் செயன்முறையானது நன்கு பயிற்றப்பட்ட பணியாளர்களினால் மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளிலே நிபுணத்துவத்துடனும் பக்கச் சார்பற்ற முறையிலும் நடத்தப்பட்டது.

## அறிமுகம்

*இலங்கையின் நவம்பர் 17ஆம் திகதிய சனாதிபதித் தேர்தல் பற்றிய ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புப் பணியானது (EU EOM) அதன் ஆரம்பக் காண்புகளின் இந்த அறிக்கையினை வெளியிடுகின்றது.*

*இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்கவின் அழைப்பினைத் தொடர்ந்து EU EOM இலங்கையில் பணியினை ஆரம்பித்தது. ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.*

*இந்த அறிக்கையானது இலங்கையிலே தேர்தலுக்கான ஏற்பாடுகள், தேர்தல் பிரசாரம் மற்றும் தேர்தல் தினம் என்பவற்றை 3 வாரங்களுக்கும் மேலாக 7 முக்கிய குழு உறுப்பினர்கள் கண்காணித்தமையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 22 நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் நாடு முழுவதிலும் 2 வாரங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கும், 51 குறுகிய கால கண்காணிப்பாளர்கள் 7 நாட்களுக்கும் நியமிக்கப்பட்டனர். இக்கண்காணிப்பாளர்கள் ஐரோப்பிய யூனியனின் 21 உறுப்பு நாடுகளிலிருந்தும் சுவிற்சர்லாந்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். கண்காணிப்பாளர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர். EU கண்காணிப்பாளர்கள் இலங்கை முழுவதிலுமுள்ள 70 இற்கும் மேற்பட்ட வாக்குகளை எண்ணும் நிலையங்களின் செயன்முறைகளையும் கண்காணித்தனர்.*

*தேர்தலுக்குப் பிந்திய சூழ்நிலையைக் கண்காணிப்பதற்காக EU EOM நாட்டிலே டிசம்பர் 4ஆம் திகதி வரை தொடர்ந்து தங்கியிருக்கும். இறுதி அறிக்கையானது பின்னர் சமர்ப்பிக்கப்படும்.*

*EU EOM இன் காண்புகள் மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனத்தில் (1948) குறிப்பிடப்பட்டுள்ள உண்மையான சனநாயகத் தேர்தல்களுக்கான சர்வதேச நியமங்களுக்கு அமையவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தத்திற்கு (1966) அமையவும் மதிப்பீடு செய்யப்பட்டன.*

## தேர்தல் முகாமைத்துவ அமைப்பினால் வெளிக்காட்டப்பட்ட பக்கச்சார்பின்மையின் அளவு

தேர்தல்கள் ஆணையாளர் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் நம்பிக்கையினைப் பெற்றவராக இருக்கின்றார். அத்துடன் அவர்களினால் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அரசியல் கட்சிகளுடன் அவர் கிரமமாக நடத்திய கூட்டங்களில் உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இது தேர்தல் நிர்வாகத்தின் வெளிப்படையான தன்மையினையும் அதன் மீதான பொதுவான நம்பிக்கையினையும் அதிகரித்தது. பல தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் இதே அணுகுமுறையினைப் பயன்படுத்தியிருந்தனர்.

எனினும், 17ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 4 வருடங்களுக்கு மேலான பின்பும், சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு பற்றிக் குடியரசின் சனாதிபதிக்கு அரசியலமைப்புச் சபையுடன் அது காலாவதியாக முன்பு இணங்க முடியாமற் போனமையானது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும். இதனால் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவினை நிறுவுவது காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. 17ஆவது திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு தேர்தல் ஆணையாளரை நியமிப்பதானது, தேர்தல் அதிகாரிகள் செயற்றிறனுடனும் சுயாதீனமாகவும் இயங்குவதற்கான அவர்களின் ஆற்றலினைக் கணிசமான அளவு பலப்படுத்தும்.

எனினும், தற்போதுள்ள தேர்தல்கள் ஆணையாளர் எதிர்கால தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தக்கூடியவராக இருக்கின்றார்.

தேர்தலுக்கான சகல தொழில் நுட்ப ஆயத்தங்களையும் சட்ட ரீதியான காலக்கெடுவிற்கு முன் தேர்தல்கள் ஆணையாளர் பூர்த்தி செய்துள்ளார். மாவட்ட மட்டத்தில், தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களும் அவர்களின் பணியாளர்களும் நன்கு ஒழுங்கமைக்கப் பட்டுள்ளதாகவும் அவர்கள் தேர்தலுக்கான ஆயத்தங்கள் மற்றும் முகாமைத்துவங்களைப் பூர்த்தி செய்திருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வாக்குப் பதிவுப் பணியாளர்கள் மற்றும் வாக்குகளை எண்ணும் பணியாளர்களின் பயிற்சியானது சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகவும் அனுகூலமாக நடத்தப்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தலில் நிற்பதற்கும் பிரசாரம் செய்வதற்குமான உரிமை

சனாதிபதித் தேர்தலில் போட்டியிட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்துப் பதின்மூன்று வேட்பாளர்களும் நியமிக்கப்பட்டார்கள். தேர்தலில் நிற்பதற்கான அவர்களின் உரிமை தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் பதிவு செய்யப்படவில்லை.

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் நீங்கலான பகுதிகளில் அபேட்சகர்கள் பொதுவாகச் சுதந்திரமாகப் பிரசாரம் செய்யவும் வாக்காளர்களைச் சந்திக்கவும் தமது அரசியல் கருத்துக்களைச் சமர்ப்பிக்கவும் கூடுமானதாயிருந்தது. EU EOM இனால் கண்காணிக்கப்பட்டதும் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் பங்குபற்றியதுமான 28 பேரணிகளில் வன்முறைகள் ஏதும் நிகழவில்லை. சட்டப்படி விளம்பரப் பதாதைகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் மட்டுமே காட்சிக்கு வைக்கப்படலாம் என்பதால் அரசியல் கட்சிகள் தமது விளம்பரங்களைக் காட்சிக்கு வைக்கக்கூடிய தமது கட்சி அலுவலகங்களை ஆங்காங்கே நிறுவும் அணுகுமுறையினைக் கையாண்டனர். நடைமுறையில், அபேட்சகர்களின் தகவற் பிரசாரத்திற்கான பிரதான மூலமாக விளங்கியவை ஊடகங்களே.

2004, 2001, 2000ஆம் ஆண்டுத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், தேர்தலுக்கு முந்திய பிரசாரமானது வன்முறைகள் குறைந்து காணப்பட்டதாக அறிக்கையிடப்பட்டாலும்

பிரசாரத்தின் இறுதி நாட்களில் வன்முறை அதிகரித்தே காணப்பட்டது. நவம்பர் 14ஆம் திகதி குருநாகலில் உள்ள யு.என்.பீ. அதிகாரியொருவரின் வீட்டினுள் கைக்குண்டொன்று வீசப்பட்டது. திருகோணமலையில் (ஒக்ரோபர் 6) ஒருவரும், பொத்துவிலில் (ஒக்ரோபர் 10) ஒருவரும், பிரசாரத்தின் இறுதி நாட்களில் கொழும்பில் ஒருவருமாக ஈழமக்கள் சனநாயக முன்னணி (EPDP) அதிகாரிகள் 3 சந்தர்ப்பங்களில் கொலையுண்டார்கள். நான்காவது சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் நபரொருவரின் மீது கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது.

## தேர்தலுக்காக அரச வளங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பைக் கிடைக்கச் செய்வதில் உள்ள நியாயத்தன்மை

தேர்தல் நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை பற்றி EU EOM இற்குப் பத்து முறைப்பாடுகளும் (அனைத்தும் ஐ.தே.க.விடமிருந்தே) மற்றும் என்ஜிஓ'களின் அறிக்கைகளும் கிடைத்தன. UPFA இன் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச வாகனங்கள் அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்டமை மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்களைப் பிரசார வேலைகளில் ஈடுபடுத்தியமை பற்றியே இவ்வறிக்கைகள் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தன. அனேக சந்தர்ப்பங்களில் அரச மற்றும் தனியார் பத்திரிகைகளில் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றின் அனுசரணையுடன் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவு செய்யப் படுவதை ஆதரிக்கும் தெளிவான நோக்குடன் விளம்பரங்கள் வெளியானதை EU EOM நேரடியாக அவதானித்தது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிரசார நோக்கங்களுக்காக அரச பேரூந்துகள் பயன்படுத்தப்பட்டதையும் EU EOM நேரடியாக அவதானித்தது.

## தேர்தல் முறைப்பாடுகள்

தேர்தல் தினம் வரை தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளருக்கு 191 முறைப்பாடுகள் கிடைத்தன. யு.என்.பீ. அவற்றுள் 159ஐச் சமர்ப்பித்திருந்தது. பெரும்பாலான முறைப்பாடுகள் (77) அரச வளங்களின் சட்ட விரோத பயன்பாடுகள் பற்றியதாக இருந்தன. அதிலும் குறிப்பாகத் தேர்தல் பிரசாரத்திற்காக அரச வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை பற்றிய முறைப்பாடுகளும் (46) காணப்பட்டன. அரச போக்குவரத்து வாகனங்கள் பிரசார நோக்கங்களுக்காகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சில சம்பவங்களை EU EOM கண்காணிப்பாளர்கள் அவதானிக்கக்கூடுமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக அரச சேவையாளர்களின் சட்டவிரோத இடமாற்றம் மற்றும் நியமனம் என்பன தொடர்பான 24 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன. மொத்தம் 30 முறைப்பாடுகள் வன்முறையில் ஈடுபடல், வாக்காளர்களை அச்சுறுத்தல் மற்றும் மட்டுக்கு மீறிய செல்வாக்கைப் பிரயோகித்தல் என்பவற்றுடன் தொடர்புற்றிருந்தன.

தேர்தல்கள் ஆணையாளர் இம்முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளுக்காக முன்னிலைப்படுத்தியபோதும், இம்முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாவென உறுதிப்படுத்துவதற்கும் மேல் நடவடிக்கைக்குமான வழிமுறை அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## <u>அரசியல் கட்சிகள், கூட்டணிகள் மற்றும் அபேட்சகர்களுக்கு ஊடக வாய்ப்புக்கள் கிடைக்கச் செய்வதிலுள்ள நியாயத்தன்மை</u>

<u>மேல்நோக்கு</u>

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் கட்சிகளையும் அபேட்சகர்களையும் ஒப்பிட்டு நோக்கி அதன்மூலம் தேர்தல் தினத்தன்று மிகத் தெளிவான ஒரு தெரிவைச் செய்வதற்கு வாக்காளர்களை இயலுமானதாக்கும் அரசியல் அபிப்பிராயங்களின் பல்வேறுபட்ட வீச்சினை ஊடகங்கள் தேர்தல் தொகுதிக்கு வழங்கின. தமது விவாதங்களைத் தேர்தல் தொகுதிக்கு முன்வைக்கும் பொருட்டு அரச தொலைக்காட்சியும் அரச வானொலியும் அனைத்து அபேட்சகர்களுக்கும் இலவச ஒளி, ஒலிபரப்பு நேரத்தை ஒதுக்கின.

தனியார் ஊடகங்களும் அரச ஊடகங்களும் கட்சி எல்லைகளினூடாகத் துருவமயப்பட்டு நின்றதுடன், ஒன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கோ அல்லது எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகருக்கோ (ரணில் விக்கிரமசிங்க) ஆதரவாகச் செயற்பட்டன. உண்மையாகவே சுதந்திரமாகச் செயற்படும் ஊடக முறைமையொன்று இல்லாததன் விளைவாக அபேட்சகர்களால் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைப் பிரசைகள் சரியாக மதிப்பீடு செய்வதற்குத் தடையேற்படுகின்றது.

தேர்தல்கள் ஆணையாளருக்கு (2005 ஒக்ரோபர் 7ஆந் திகதி செய்ததுபோல்) எந்தவோர் ஒலிபரப்புநர் அல்லது ஒளிபரப்புநர் அல்லது எந்தவொரு பத்திரிகையின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளரையும் கட்டுப்படுத்தக்கூடிய வழிகாட்டல்களை வெளியிடுவதற்கான உரிமை இருந்தபோதிலும் அவ்வாறான வழிகாட்டல்களின் உண்மையான நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்குரிய வளங்கள் அவருக்கில்லை. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும் மேற்பார்வை செய்யும் பொருட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானமானது மிகவும் தாமதமாகவே எடுக்கப்பட்டது. இதனால் அரச ஊடகத்தின் ஒட்டுமொத்தமான நடத்தையின்மீது போதிய அளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. கடந்த வருடப் பாராளுமன்றத் தேர்தலின் போதும் இதுதான் நிகழ்ந்தது.

## ஊடகக் கண்காணிப்பு

இப்பிரசாரத்தில் நிலவிய பாரிய பிரச்சினைகளுள் ஒன்றாக விளங்கியது தேர்தல் பற்றிய ஊடக உள்ளடக்கத்தில் காட்டப்படவேண்டிய பாரபட்சமின்மை மற்றும் நியாயமான தன்மை என்பன பற்றியதாகும். போட்டியிடும் இரு பிரதான சக்திகளுக்கிடையேயான கடுமையாகத் துருவமயப்பட்ட ஒரு சூழமைவில், அரச ஊடகமானது பரவலாகப் பிரதமருக்கு ஆதரவானதாகப் பார்க்கப்பட்டது. அதற்கு நேர்மாறாகத் தனியார் ஊடகமானது பரவலாக யு.என்.பீ. அபேட்சகருக்கு ஆதரவானதாக நோக்கப்பட்டது. EU EOM ஆல் நடாத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் காண்புகளிலிருந்து இக்கோலம் தெளிவாக ஊர்ஜிதமாகின்றது.[1]

தமது செய்தியறிக்கைகளிலோ அல்லது நடப்பு விவகார உள்ளடக்கங்களிலோ அல்லது ஏனைய தகவல்தரு நிகழ்ச்சித்திட்டங்களிலோ எதிலுமே சமநிலையானதும் பாரபட்சமற்றதுமான தேர்தல் தொடர்பான உள்ளடக்கங்களை வழங்குவதற்கான கடமையை அரச ஊடகங்கள் நிறைவேற்றவில்லை.

அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசைகள் அபேட்சகர்களுக்கான தமது தேர்தல் உள்ளடக்கத்தில் கிட்டத்தட்ட 74%ஐ (ரூபவாஹினி: 74%; ஐரிஎன்: 73%) ராஜபக்ஷ அவர்களுக்கு வழங்கிய அதேவேளை சுமார் 25%ஐ மட்டுமே விக்கிரமசிங்க அவர்களுக்கு வழங்கின. அதேமாதிரியான ஒரு போக்கே அரச அச்சு ஊடகங்களிலும் தென்பட்டது. தமது பத்திரிகைகளில் சுமார் 70% விளம்பரப் பரப்பை ராஜபக்ஷ அவர்களுக்கு ஒதுக்கியிருந்தனர். (டெய்லி நியூஸ் 73% மற்றும் தினமின 66%). இதனோடு ஒப்பிடுகையில் யுஎன்பீ அபேட்சகருக்கு 25% மட்டுமே ஒதுக்கப்பட்டது.

இதற்கு மறுதலையாகப் பார்க்கையில், தனியார் தொலைக்காட்சி அலைவரிசையான ஸ்வர்ணவாஹினி தனது தேர்தல் உள்ளடக்கத்தின் 66%ஐ விக்கிரமசிங்கவுக்கும் 33%ஐ UPFA அபேட்சகருக்கும் ஒதுக்கியது. தனியார் கட்டுப்பாட்டிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் இதேபோன்ற, ஆனால் சற்றுக் குறைந்த அழுத்தத்துடனான போக்கைக் கொண்டிருந்தன. அதன்படி, டெய்லி மிரர் தனது மொத்தத் தேர்தல் விளம்பரத்தின் 45%ஐயும் (முக்கியமாக சாதக உள்ளடக்கம்), வீரகேசரி 62%ஐயும் விக்கிரமசிங்கவுக்கு வழங்கிய அதேவேளை, ராஜபக்ஷவுக்கு அவை முறையே 53% ஐயும் (பாதக உள்ளடக்கம்), 36%ஐயும்

[1] ஒக்ரோபர் 28ஆந் திகதி, EU EOM இன் ஊடகப் பிரிவானது அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி மற்றும் ஐரிஎன் தொலைக்காட்சி நிலையங்களாலும் சுவர்ணவாஹினி எனும் தனியார் தொலைக்காட்சி நிலையத்தாலும் மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரசாரத்தைக் கண்காணிக்கத் தொடங்கியது. அத்துடன் அரசுக்குச் சொந்தமான டெய்லி நியூஸ் (ஆங்கிலம்), தினமின (சிங்களம்) மற்றும் தனியார் பத்திரிகைகளான டெய்லி மிரர் (ஆங்கிலம்), தி ஐலன்ட் (ஆங்கிலம்) மற்றும் வீரகேசரி (தமிழ்) ஆகிய ஐந்து பத்திரிகைகளைக் கண்காணிக்கும் பணியையும் மேற்கொண்டது. ஊடகக் கண்காணிப்பானது அளவு மற்றும் தரம் ஆகிய இருவகைப் பகுப்பாய்வையும் உள்ளடக்கியது.

வழங்கியிருந்தன. அதிக சமநிலையான உள்ளடக்கத்தை 'ஐலன்ட்' பத்திரிகை கொண்டிருந்தது. தேர்தல் பற்றிய உள்ளடக்கத்தின் 51% ஐ விக்கிரமசிங்கவுக்கும் 44%ஐ ராஜபக்ஷவுக்கும் அது வழங்கியிருந்தது.

EU EOM ஆனது தனியார் மற்றும் அரச இலத்திரனியல் ஊடகங்களில் அதிகரித்துக் காணப்பட்ட தேர்தல் அமைதி மீறலை (வாக்களிப்புத் தொடங்குவதற்கு முன்னரான 72 மணித்தியாலங்கள்[2]) அவதானித்தது. தேர்தல் அமைதி தொடர்பிலான ஒழுங்குவிதிகள் தெளிவில்லாமலும் நேரச் சட்டகம் குறித்து வெவ்வேறு ஊடகங்கள் (இலத்திரனியல் மற்றும் அச்சு) வெவ்வேறு வியாக்கியானங்களைக் கொடுக்க இடமளிப்பதாகவும் இருந்தன என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

## <u>வாக்காளர் பதிவும் சர்வதேச வாக்குரிமையும்</u>

இந்தத் தேர்தலுக்கான பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 13,327,160 ஆகும். இதில் கடந்த (2004) தேர்தலை விட அண்ணளவாக 428,000 வாக்குகள் அதிகமாக உள்ளன. ஆனாலும் வாக்காளர் இடாப்பானது தீவின் கரையோரங்களை சுனாமி தாக்குவதற்கு முன்னராக 2004 யூனில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த நிலைமையைக் கையாள்வதற்காகவும் ஆள் மாறாட்டத்திற்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்காகவும் தேர்தல்கள் ஆணையாளர் சுனாமியால் இறந்துபோன அல்லது காணாமற்போன 40,000 பேர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் குறிப்பிடும் விசேட ஏற்பாட்டை அறிமுகம் செய்தார்.

பதிவுசெய்யும் செயன்முறையின் பல குறைபாடுகள் EU EOM க்கு அறிக்கையிடப்பட்டன:

அ) பதிவுத் திகதியில் (2004) 18 வயதையடைந்த பிரசைகள் மாத்திரம் வாக்காளர்களாகப் பதிவு செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதன் நிமித்தம் இடைக் காலப்பகுதியில், தேர்தல் திகதியளவில் 18 வயதடைந்தவர்கள், வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படாமையினால் வாக்களிக்க முடியவில்லை.

ஆ) வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் LTTE கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து, வீடுகள் தோறுமான கணக்கீடு மேற்கொள்ளப் படவில்லை. முன்னைய தேர்தல் அவதானிப்பில் குறிப்பிட்டவாறு, யாழ்ப்பாணத்தில் பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (701,938) அங்கு வதிவோரின்

[2] அரசியலமைப்பு (17ஆம் திருத்தச் சட்டத்தின் 104ஆம் உறுப்புரை) மற்றும் சனாதிபதி தேர்தல் சட்டம் (உறுப்புரை 117) என்பனவற்றின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரால் கூறப்பட்டவாறு.

எண்ணிக்கையுடன் ஒத்துப்போவதாக இல்லை. (இந்த எண்ணிக்கையிலும் விட அரைவாசி யாகவே இதன் உச்ச அளவு இருக்க வேண்டுமென மதிப்பிடப்படுகிறது)

இ) மாவட்டம் பூராவும் உள்ள இணைப் பிரதிகளை இனங்காணவென மத்திய மட்டத்தில் எந்தப் பொறிமுறையும் அமைக்கப்படவில்லை. இணைப் பிரதிகளின் அழிப்பு ஒவ்வொரு சம்பவமாக அழிக்கப்பட முடியும். சாதாரணமாக இது தனிப்பட்டவர்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. 30,000 இணைப் பிரதிகள் உள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மதிப்பிடுகிறார்.

ஈ) சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் 440,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆனாலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் அநேகமாகத் தம் சொந்த மாவட்டத்தில், தம் முன்னைய வதிவிடங்களிலிருந்து சொற்ப கி.மீ. தொலைவிலேயே வதிகிறார்கள். தேர்தல்கள் ஆணையாளர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் புதிய வதிவிடங்களை இனங்காணுமாறு கிராம சேவகர்களைப் பணித்திருந்தபோதிலும், நாட்டின் கிழக்குப் பகுதியில் குறிப்பிடத்தக்களவு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டைகள் தேவையில்லை என்பதைச் சில வாக்காளர்கள் அறிந்து வைத்திராமையால் அவர்கள் தாம் வாக்களிக்க முடியாதென்று நினைத்திருப்பார்கள்.

உ) வெளிநாட்டில் வதியும் 1.5 மில்லியன் என மதிப்பிடப்படும் இலங்கைப் பிரசைகளில் அநேகமானவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப் பட்டுள்ளதாக EU EOM அறிக்கைகளைப் பெற்றிருக்கிறது. அப்பிரசைகள் தேர்தல் தினத்தன்று இங்கு வாக்களிக்க வரக்கூடியவர்களா என அறியப்படவில்லை. வெளிநாட்டில் வதியும் ஆட்களின் தரவுகளைத் தேர்தல் நிர்வாகத்தினருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழங்கத் தவறியதன் காரணமாகவே இப்பெயர்கள் தேர்தல் தினத்தன்று இன்னும் வாக்காளர் இடாப்பில் உள்ளன. எதிர்வரும் வாரங்களில் EU EOM இன்னும் இவ்விடயங்களை ஆராயும்.

## நவம்பர் 9, உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவும் வாக்காளர்களைச் சமமாக நடாத்துதலும்

உயர் நீதிமன்றம் நவம்பர் 9ஆம் திகதி, இரண்டு வேட்பாளர்களினால் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறுகை தொடர்பான இரண்டு மனுக்கள் மீது இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட புதிய ஏற்பாடுகள் வடக்கு, கிழக்கில் உள்ள கொத்தணி வாக்கு நிலையங்களை மட்டுமே குறித்து நின்றது. LTTE இன் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறாத காரணத்தால் வாக்களிப்பு நிலையத்தினுள் வாக்காளர்கள் செல்வதற்கு முன் பிரசாரத்தில்

ஈடுபட அபேட்சகர்களை அனுமதிப்பதே இவ்வேற்பாட்டின் நோக்கமாகும். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இப்புதிய நடவடிக்கையானது வாக்காளர்களின் தடங்கலற்ற வாக்களிப்பின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும். வாக்களிப்புத் தினத்தன்று நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய நோக்கம் வாக்களிப்பேயன்றிப் பிரசாரமல்ல என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

2004 தேர்தலின்போது அறிக்கையிடப்பட்டவாறான இது போன்ற ஆள் மாறாட்டங்களைத் தடுக்கும் பொருட்டு, உயர் நீதிமன்றமானது சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்க்குப் புதிய அதிகாரமொன்றை வழங்கியது. அதன்படி தனது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வாக்காளரிடம் கேள்விகள் கேட்பதற்கும், அவரது ஆளடையாளம் நிரூபிக்கப்படாவிடின் அவருக்கு வாக்குச்சீட்டு வழங்க மறுப்பதற்குமானதே அந்த அதிகாரமாகும்.

மேலும் ஆளொருவர் தனது அடையாளம் குறித்தோ அல்லது வயது குறித்தோ பிழையான கூற்றினைக் கூறுகின்றாரென்ற சந்தேகம் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவரை வாக்களிக்காமல் தடுத்து வைக்கப் புதிய கட்டாய நடவடிக்கைகளை இடைக்கால உத்தரவு ஏற்பாடு செய்கிறது; “ஏனெனில் அந்த நபர் சட்டத்தின் சாதாரண நடைமுறைக்கும் தண்டங்களுக்கும் உட்படுத்தப்படமாட்டார்” ஆனால், சனாதிபதித் தேர்தலில் உபயோகிக்கப்படுவதற்கான வாக்காளர் பதிவேட்டுப் பட்டியலை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பும் அத்தேர்தல் தொடர்பான குற்றங்கள் என்ன, அவற்றுக்கான தண்டனை என்ன என்று கூறும் பொறுப்பும் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உரித்தானது எனக் கூறும் அரசியல் யாப்பின் 31(6ஆ/இ) ஆம் உறுப்புரைக்கு இது முரணாயுள்ளது.

இறுதியாக, தான் 18 வயது நிரம்பியவன்/ள் என்பதை நிரூபிக்கத் தவறிய ஓர் இளைஞனை/யுவதியைத் தடுத்து வைப்பது, அது ஒரு நாளுக்குத்தான் என்றாலும், செய்ய முயற்சித்த குற்றத்திற்குச் சம விகிதத்தில் அது இல்லை.

இந்த ஆணையைப் பிறப்பித்ததனால், உயர் நீதிமன்றமானது தற்போதுள்ள சட்டக் கட்டமைப்புக்கு அப்பாற் சென்றுள்ளது. இத்தீர்மானம் இலங்கைப் பிரசைகளிடையே ஓர் இரட்டை நிலைப்பாட்டை உட்புகுத்துகின்றது. இது குறித்து எதிர்காலத்தில் உரிய கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். மேலும், சுதந்திரம் மறுக்கப்படல், துணை நாடும் வழிமுறையமைப்புக்கு வாய்ப்பில்லாமை மற்றும் குறித்த செயலிலுள்ள குற்றம் பற்றிய எண்பிக்கப்படாத துணிவு என்பனவற்றை EU EOM ஆனது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானவையாகக் கருதுகிறது.

## தேர்தல் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு மற்றும் வாக்குக் கணக்கெடுப்பு என்பன நடாத்தப்படும் விதம்

**(அ) தபால்மூல வாக்களிப்பு** - நவம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு நடைபெற்ற விதத்தை EU EOM அவதானித்தது. 2004இல் நடைபெற்றது போன்று நடைமுறைகள் யாவும் நன்கு மதிக்கப்பட்டன. இதற்குரிய பொருட்கள் காணாமற் போன சில சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அவதானிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் 8% வீதமானவற்றில் வாக்களிப்பு நடைமுறையின் சகல கட்டங்களிலும் அவ்வாக்கின் இரகசியத்தன்மை நிச்சயப்படுத்தப்பட முடியவில்லை (வாக்குச்சீட்டில் தமது குறியீட்டை இரகசியமாக இடும் பொருட்டு வாக்காளர்கள் தம்மை மற்றவர்களினின்று வேறாகப் பிரித்துக்கொள்ள முடியாமையே பிரதான காரணம்).

தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களில் பெரும் எண்ணிக்கையிலானவை (சுமார் 17%) பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட அளவில் நிராகரிக்கப்பட்டதாக EU EOM க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (உதாரணமாக நுவரெலியாவில் கிட்டத்தட்ட 23%). இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருந்ததாகத் தேர்தல் நிருவாகத்தினால் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்றில் வாக்காளர் உரிய நேரத்தில் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவில்லை, அல்லது வாக்காளர் விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் நிரப்பவில்லை. எதிர்வரும் வாரங்களில் EU EOM ஆனது இது குறித்து மேலும் ஆராயவுள்ளது.

### (ஆ) தேர்தல் தினம் மற்றும் வாக்குக் கணக்கெடுப்பு

LTTE இன் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள வாக்காளர்களின் பங்கேற்பு மிகவும் குறைவானதாக இருந்தது. அதுபோன்றே தமிழ் வாக்காளர்கள் வதியும் வடக்கு, கிழக்கின் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் குறைந்து காணப்பட்டது. வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பில் EU EOM உறுப்பினர்கள் இதனை அவதானித்தனர். LTTE உம் TNA உம் நவம்பர் 10இல் வெளியிட்ட கூட்டறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டது. "...தேர்தலில் எந்த அக்கறையும் செலுத்துவது பயனற்ற ஒரு செயலாகும்..." இது இப்பிரதேசத்திலுள்ள வாக்காளர்கள் மத்தியில் பீதியும் நிச்சயமற்ற தன்மையும் கலந்த ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்தது. உண்மையில் எது நிகழவேண்டுமென்று LTTE விரும்பியதோ அதில் எதுவிதமான கருத்துத் தெளிவின்மையும் இல்லையென்பதை உறுதிப்படுத்துமுகமாக, வன்முறையும் அச்சமும் கலந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கியதன் மூலமாக இப்பகிஷ்கரிப்பை அவர்கள் அமுல்படுத்தினர். மேலும் தேர்தல் தினத்தன்று வேலை நிறுத்தம் செய்யுமாறும் அந்நாளை "ஒரு துக்க

தினமாக" அனுசரிக்குமாறும் தேர்தல் பணியாளர்களைக் கோரி, முன்னிலை வகிக்கும் பல LTTE அமைப்புகள் முன்னர் தேர்தல் பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்திருந்தன.

மட்டக்களப்பில் தமிழ்ப் பிரதேசங்களில் ஏழு கைக்குண்டு வீச்சு அல்லது வெடி குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட அதிகரித்த அளவிலான வன்முறைகள் இடம் பெற்றதாக EU EOM அவதானிப்பாளர்கள் அறிக்கை செய்தனர். வாக்கெடுப்பு நிலையங்கள், மாவட்டத்தின் பிரதான கணக்கெடுப்பு நிலையம், கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்கான ஒரு பேரூந்து, மற்றும் ஒரு பொலிஸ் சோதனைச் சாவடி என்பவற்றை இலக்கு வைத்தே இச்சம்பவங்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களின் கட்டுப்பாட்டு எல்லைகளில் சாதாரண உடைகளில் உள்ள குழுவினர் ஒன்றுதிரண்டு வாக்காளர் அட்டைகளை எரியூட்டிய சம்பவங்களை அவதானிப்பாளர்கள் நேரில் கண்டனர். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பின் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பதற்றமான நிலை காணப்பட்டதையடுத்து வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

நவம்பர் 17 ஆம் திகதி ஏனைய எல்லா இடங்களிலும் வாக்களிப்பானது பொதுவாகச் சுமுகமாக நடைபெற்றது. 22 மாவட்டங்களிலும் உள்ள வாக்கெடுப்பு மற்றும் கணக்கெடுப்பு நிலையங்களை EU EOM கண்காணித்தது. ஒட்டுமொத்தப் பார்வையில் தேர்தல் தினமானது அதிக எண்ணிக்கையிலான வாக்காளர் பங்கேற்புடன் நன்கு நிருவகிக்கப்பட்ட செயன்முறையைக் கொண்டதாக விளங்கியது. கண்காணிக்கப்பட்ட 330க்கும் மேற்பட்ட நிலையங்களில் 96% வீதமானவற்றில் வாக்களிப்புச் செயன்முறை நல்ல விதமாக நடைபெற்றதாக EU EOM கண்காணிப்பாளர்கள் மதிப்பீடு செய்தனர். கண்காணிக்கப்பட்ட மொத்த வாக்களிப்பு நிலையங்களில் 4% வீதமானவற்றில் பிரசார நடவடிக்கைகளுக்கான பொருட்கள் வாக்களிப்பு நிலையத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தினுள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. விஜயம் செய்த அனைத்து நிலையங்களிலும் கணக்கெடுப்புச் செயன்முறை நன்றாக அல்லது போதியளவு நன்றாக இருந்ததென மதிப்பிடப்பட்டது.

விஜயம் செய்த அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் ( 89%) தேர்தல் முகவர்களின் பிரசன்னம் ஏறத்தாழ வெளிப்படைத் தன்மை கொண்ட சாதகமான நடைமுறையாக இருந்தது. விஜயம் செய்த வாக்களிப்பு நிலையங்களில் 73% வீதமானவற்றில் உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் சமுகமாயிருந்தனர். கண்காணிக்கப்பட்ட கணக்கெடுப்பு நிலையங்களில் 88% வீதமானவற்றில் தேர்தல் முகவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

வாக்குச் சீட்டின் அடிக்கட்டையில் ஒவ்வொரு வாக்காளரின் பதிவு இலக்கமும் குறிப்பிடப் படுவதன் காரணமாக அவ்வாறு குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வாக்குச் சீட்டும் இலகுவில்

தேடிக் கண்டுபிடிக்கக்கூடியதாய் இருந்தமை ஒரு நடைமுறை ஒழுங்காய் இருந்தது. மோசடியைத் தடுக்கும் ஒரு வழிமுறையாக இது எண்ணப்படும் அதேவேளை, அடிப்படையில் வாக்குச்சீட்டின் இரகசியத்திற்கு இது ஊறு விளைவிக்கின்றது.

தேர்தல் அதிகாரிகள் வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் குறியிடுவதைப் பார்க்கும் விதத்தில் வாக்குச் சாவடிகள் அமைந்திருந்ததாகக் கண்காணிப்பாளர்கள் அறிக்கையிட்டனர். தேர்தல் மோசடிக்கு எதிரான ஒரு முயற்சியாக இது மேற்கொள்ளப்பட்டாலும் வாக்குச் சீட்டின் இரகசியத் தன்மையை விட்டுக் கொடுப்பதாக அமைகிறது. கண்காணிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் 75% வீதமானவற்றின் ஒழுங்கமைப்பு போதுமானதாக இருக்கவில்லை. இது முன்னைய EU EOM களாலும் இனங்காணப்பட்ட ஒரு விடயமாகும்.

வாக்களிப்பதற்கு முன் வாக்காளர்களுக்கான ஏதாவதொரு அடையாள அட்டையை அல்லது வாக்காளர் அட்டையைக் கண்காணிப்பது சட்டரீதியாக்கப்படாமையானது ஆள் மாறாட்டம் அல்லது பல தடவை வாக்களித்தல் போன்ற முயற்சிகளுக்கெதிரான ஒரு பலவீனமான பாதுகாப்பு நடவடிக்கையாகும். மேலும் இவ்விடயத்தில் தலைமை தாங்கும் அலுவலரின் தற்றுணிபானது வாக்காளர் தம் வாக்கினை அளிக்க முடியாத நிலைக்கு இட்டுச் செல்லலாம். விஜயம் செய்த வாக்களிப்பு நிலையங்களில் 4% வீதமானவற்றில் அடையாளம் நிரூபிக்கப்படாமையினால் வாக்குச்சீட்டு மறுக்கப்பட்டமையைக் கண்காணிப்பாளர்கள் நேரடியாகக் கண்டனர். கண்காணிக்கப்பட்ட 97% வீதமான வாக்களிப்பு நிலையங்களில் சில வாக்காளர்களின் ஆள் அடையாளம் தொடர்பில் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன. அதிகாரபூர்வ ஆளடையாளம் தேவைப்படுத்தப்பட வேண்டுமென்று 2000, 2001 மற்றும் 2004ஆம் ஆண்டுகளின் EU EOM கள் அனைத்தும் பரிந்துரைத்திருந்தன.

சில சம்பவங்களில் இரட்டை வாக்களிப்புக்கு எதிராக எடுக்கப்பட்ட நடைமுறைகள் மிகவும் பலவீனமானதாகப் பிரயோகிக்கப்பட்டன. அடையாளமிடும் மை எப்போதும் பயன்படுத்தப்பட்டாலும் கண்காணிக்கப்பட்ட 9% வீதமான வாக்களிப்பு நிலையங்களில் வாக்குச்சீட்டு வழங்கப்படுமுன் வாக்காளருக்கு மை தடவப்பட்டுள்ளதா என்பது சோதிக்கப் படவில்லை. திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கேகாலை ஆகிய இடங்களில் மையைப் பரிசோதித்துப் பார்த்ததில் அது பார்வைக்குத் தென்படுவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கும் அதிகமாக எடுத்ததாக கண்காணிப்பாளர்கள் அறிக்கை செய்தனர். விஜயம் செய்த 3% வீதமான வாக்களிப்பு நிலையங்களில் கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டன (ஒருவருடைய பெயரில் இன்னொருவர் ஏலவே வாக்களித்திருக்கும் சமயங்களில் இவை வழங்கப்படுகின்றன)

அதிகளவான ஆயுதம் தரித்த பொலிசார் வடக்கிலுள்ள சில வாக்கெடுப்பு நிலையங்களினுள்ளும் குறிப்பாகக் கிழக்கிலும் காணப்பட்டதாக அவதானிப்பாளர்கள் குறிப்பிட்டனர். இது பதற்றமான சூழ்நிலையில் பாதுகாப்பை வழங்கினாலும் வாக்காளர் மீது அச்சுறுத்தலையும் ஏற்படுத்தக்கூடிய காரணிகளைக் கொண்டுள்ளது.

கொழும்பில் குறிப்பிடக்கூடியளவு மக்கள் தங்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பில் காணப்படுகிறதா என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் வாக்குச் சாவடிகளுக்கு வருகை தந்ததாகவும் அவர்களது பெயர்கள் அதில் காணப்படவில்லையெனவும் தொடர்ச்சியான அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. பலர் இதற்கு முன்னர் இதே நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டதாகவும், தமது அயலவர்களும் இவ்வாறு பதிவு செய்து கொண்டதாகவும் குறிப்பிட்டனர். ஆனால், இப்போது அவர்களை ஏன் பதிவு செய்யவில்லையென்பதும் ஏன் வாக்களிக்க முடியவில்லையென்பதும் அவர்களுக்குப் புரியவில்லை. வாக்காளர்களைப் பதிவு செய்யும் செயற்பாட்டில் காணப்பட்ட போதாமைகளின் விளைவாக இவர்களது வாக்களிக்கும் உரிமை இல்லாமல் போகும் அபாயத்தை எதிர்கொண்டதுடன், இது பொதுமக்களிடத்தில் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியது.

## <u>தேர்தலைச் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்குத் தேவையெனக் கருதப்படும் ஏனைய விடயங்கள்</u>

### <u>பொலிஸ்</u>

தேர்தல் தினத்தன்றும் பிரசாரத்தின்போதும் பொலிசாரின் செயற்பாடுகள் இம்முறை அண்மையில் இடம்பெற்ற தேர்தல்களை விடச் சிறப்பாகக் காணப்பட்டது. பிரசாரக் காலப்பகுதியின்போது, சுவரொட்டிகள் ஒட்டுவதை, கட்சிச் சின்னங்களைக் காட்டுவதை வினைத்திறனுடன் பொலிசார் தடை செய்தனர். எனவே தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகளைக் குறைப்பதில் கணிசமானளவு பங்களிப்புச் செய்தனர். இது நாடு முழுவதிலுமிருந்து EU EOM விற்கு அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், தேர்தல் வன்முறைகள் தொடர்பான புள்ளிவிபரங்களைப் பொலிஸ் மாஅதிபரும் தேர்தலுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபரும் கண்காணிப்புக் குழுவினரிடம் வழங்க மறுத்தமைக்காக, கடந்த கால EU EOM உடன் என்ன நடைபெற்றது என்பதை ஒப்பிட்டுத் தனது கவலையைத் தெரிவித்தது.

**<u>வாக்காளர் அறிவூட்டல்கள்</u>**

ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் அறிவூட்டல்கள் ஏழ்மையானதாகவும் போதாமையானதாகவும் காணப்பட்டது. குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களில் இது காணப்பட்டது. விருப்பு வாக்குகளில் காணப்பட்ட சிக்கல்களைத் தெளிவுபடுத்துவதற்கான வாக்காளர் அறிவூட்டல்கள் இம்முறைத் தேர்தலில் முக்கியத்துவம் பெற்றன. ஊடகங்களுக்கான EC வழிகாட்டிகள் வாக்காளர்களுக்கு அறிவூட்டுவது தொடர்பான எந்த ஏற்பாடுகளையும் குறிப்பிடத் தவறிவிட்டன.